# இலங்கையில் நிறுவன ரீதியாக செயற்படுவதில் ஏற்பட்ட சவால்கள்



**RIGHT TO LIFE HUMAN RIGHTS CENTER**

# இலங்கையில் நிறுவன ரீதியாக செயற்படுவதில் ஏற்பட்ட சவால்கள்

இலங்கையில் சிவில் சமூகங்களும் அரச சார்பற்ற அமைப்புகளும் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய ஆய்வு மற்றும் சட்டத் திருத்தத்திற்கான முன்மொழிவுகள்

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

ரைட் டு லை.ஃ.ப் மனித உரிமைகள் நிலையம்

மே 2023

ஆசிரியர் : பிலிப் திஸாநாயக்க

செம்மையாக்கம் : அஜித் பெரகும் ஜயசிங்க

ஆய்வு உதவி : தினிதி சுபேக்ஷலா

திட்ட முகாமையாளர் : ரக்ஷ்மிகா விஜேசிங்க

வெளியீடு : ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையம்

அச்சுப்பதிப்பு : Design Systems (Pvt) Ltd

# உள்ளடக்கம்

முன்னுரை.................................................................................................................................. 4

1 சிவில் சமூக அமைப்புகளின்
வரலாறு ........................................................................................................................ 7

2 சிவில் சமூக அமைப்புகளை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளின் வரலாறு................................ 9

3 சிவில் சமூக அமைப்புக்களை நெறிப்படுத்த பாராளுமன்றத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் ...... 10

4 தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம்................................................................................................... 13

5 சட்டச் சீர்திருத்தங்கள் குறித்த சிவில் சமூகத்தின் அடிப்படைகள் ....................................................... 14

6 சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பரப்புரை பிரச்சாரத்தின் நாட்குறிப்பு .................................................................................................................... 15

7 உள்நாட்டு நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் தீர்வு முன்மொழிவுகளும்............................... 17

8 பிராந்திய ரீதியான
கலந்துரையாடல்கள் ......................................................................................................... 19

9 பரிந்துரைகள்................................................................................................................ 21

மூலங்கள்:..................................................................................................................... 22

Annexures ......................................................................................................................23

# முன்னுரை

இலங்கையில் காணப்படும் சிவில் சமூக அமைப்புகளின் சரியான எண்ணிக்கை குறித்த உத்தியோகபூர்வ பதிவுகள் எவையும் இல்லை. பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் குறித்த செயலகங்களில் மாத்திரம் 44,000இற்கும் அதிகமான அமைப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பதிவுகள் தெரிவிக்கின்றன. இதற்கு மேலதிகமாக, கம்பனிகள் சட்டம், சங்கங்கள் கட்டளைச் சட்டம், தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டம், கூட்டுறவு சங்கங்கள் கட்டளைச் சட்டம், பாராளுமன்ற சிறப்புச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ், அறக்கட்டளைகளாகவும் அமைப்புகளாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் சரியான எண்ணிக்கையைக் கண்டறிய முடியவில்லை.

எந்தவொரு கட்டமைப்பின் கீழும் பதிவுசெய்யப்படாத நிறுவனங்களின் எண்ணிக்கையானது, அரசாங்கத்தின் ஏதோவொரு கட்டமைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமாகும். எனினும், இந்த நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் வேறுபட்டவை. மற்றும் அவற்றில் பல நிறுவனங்கள் வழங்கும் சேவைகள் மிகவும் உயர்ந்த மட்டத்தில் உள்ளன. இந்த நிறுவனங்களில் பல, குறிப்பிடத்தக்க மக்கள் பங்கேற்பினையும் மக்களது அங்கீகாரத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனங்களின் இருப்பிற்கு இவை பெரும் ஆதரவாக உள்ளன.

தேசிய மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் செயற்படும் இந்த நிறுவனங்களை வெளிநாட்டு நிதியளிப்பில் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் நிதியளிக்கப்படாத நிறுவனங்கள் என இரண்டு பிரதான பிரிவுகளாக பிரிக்கலாம். இன்று, அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு நிதியுதவி பெறும் நிறுவனங்கள் என பொதுவாக கருதப்படுகின்றன.

வெளிநாட்டு நிதியுதவியை பெற்றுக்கொள்ளும் இந்த அரசு சாரா நிறுவனங்களின் குறிக்கோள்கள் பெரும்பாலும், ஐக்கிய நாடுகள் சபை உட்பட ஏனைய சர்வதேச அமைப்புகளின் வரம்பிற்குட்பட்டது. அத்தோடு, சர்வதேச சாசனங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் போன்ற சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் விடயங்களில் அவை செயற்படுகின்றன. குறித்த சாசனங்களையும் ஒப்பந்தங்களையும் சில சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கமும் அங்கீகரித்துள்ளது. எனினும், அவற்றை செயற்படுத்துவதில் அக்கறை செலுத்துவதில்லை.

மனித உரிமைகள், சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் கலாச்சார உரிமைகள் உள்ளிட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஆகிய துறைகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன. குறிப்பாக சட்டவிரோத கொலைகள், காணாமல் போதல்கள், சித்திரவதைகள், பொய் வழக்குகள் போன்ற மனித உரிமை மீறல்கள், சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள், மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போன்ற சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற விடயங்களில் அவர்கள் முக்கியமாக பணியாற்றுகின்றனர்.

அரசாங்கங்களால் கைவிடப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட மேற்கூறிய பிரச்சினைகளை பல அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவர்த்திப்பதால், அவற்றின் வெளிப்பாடுகளும் பரிந்துரைகளும், அரசாங்கத்தின் மீதான சர்வதேக சமூகத்தின் பல்வேறு தலையீடுகளுக்கு வழிவகுக்கின்றது. இதன் விளைவாக, அரசாங்கங்களுக்கும் இந்த நிறுவனங்களுக்கும் இடையில் குழப்பம் அல்லது முரண்பாடுகள் உருவாகின்றன.

இந்த நிறுவனங்களை தவறாக சித்தரிக்க அல்லது ஒருசில கட்டுப்பாடுகளுக்குள் உள்வாங்குவதற்கான பல்வேறு முயற்சிகள் இடம்பெற்ற அனுபவங்கள் எமக்குண்டு. இத்துறையில் செயற்படும் நிறுவனங்களுக்கு எதிராக தவறான அறிக்கைகளை வெளியிடுதல், அரச பாதுகாப்பு நிறுவனங்கள் மூலம் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்தல், அரச கட்டமைப்புகளில் பதிவு செய்யும் செயற்பாடுகளின் போது அதில் செல்வாக்குச் செலுத்துதல் மற்றும் பதிவிற்கு பின்னர் பல்வேறு நிர்வாக நடைமுறைகள் ஊடாக தலையீடு செய்தல் ஆகியன, சில ஆட்சிக்காலங்களில் பொதுவாக இடம்பெற்றன.

இதன் காரணமாக, 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புக்கள் (பதிவு மற்றும் கண்காணிப்பு) சட்டத்தின் கீழ் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் அண்மைக்காலமாக பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன. குறித்த நிறுவனங்களுக்கான வருடாந்த அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல், புதிய பதிவினை மேற்கொள்வதில் பாரிய சிரமம், வங்கிக் கணக்குகளை கண்காணித்தல் மற்றும் கணக்கியல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தல், தமது பிரதேசத்திற்கு வெளிப்பகுதியில் செயலாற்ற அனுமதி பெறுவதில் சிக்கல் என்பன அவர்கள் எதிர்கொண்ட பிரதான பிரச்சினைகளாகும். இவற்றிற்கு மேலதிகமாக, அடிக்கடி நடத்தப்படும் விசாரணைகள், தொடர் விசாரணைகள், பாதுகாப்புப் படையினரின் அச்சுறுத்தலான செயற்பாடுகள் போன்றவற்றால் பல உள்ளூர் அமைப்புகள் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகின.

இவ்வளவு சிரமங்களையும் சகித்துக்கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள், தற்போது மேலும் ஒரு சிக்கலை எதிர்கொண்டுள்ளன. அதாவது, 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதோடு, புதிய சட்ட வரைபு நடவடிக்கையை சட்ட வரைஞர் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

சிவில் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு புதிய திருத்தம் சாதகமாக அமைவதற்கான வாய்ப்பில்லை. சகல நிறுவனங்களும் ஒரே சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதை புதிய திருத்தம் முன்மொழிகின்றது. இதன் மூலம் அவை தொடர்ந்து அரசாங்க மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும். அத்தோடு, சில அமைப்புகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளும் இந்த புதிய சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும்.

இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு, சகல அரச சார்பற்ற நிறுவனங்களும் அறிவினை பெற்றுக்கொள்வதோடு, ஒன்றிணைந்து ஒரே இலக்குடன் செயற்படுவது அவசியமாகும். புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு முன், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசித்து அவர்களின் கருத்துகளை பெறுவது அவசியமாகும். அரசியலமைப்பினால் அடிப்படை உரிமைகளை புதிய சட்டங்கள் பாதுகாக்க வேண்டும். இதில் ஒன்றுகூடும் சுதந்திரம், பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் சர்வதேச சாசனங்களால் பாதுகாக்கப்படும் ஏனைய சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உள்ளடங்கும்.

இலங்கையில் தீவிரமாகச் செயற்படும் நிறுவனங்களுடன் வலையமைப்பை ஏற்படுத்துவதன் மூலம், சிவில் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய கூட்டமைப்பு உருவாக்கத்தை ஒரு குறிப்பிட்ட சாதனையாகக் கருதலாம். 2023 ஜனவரி 12ஆம் திகதி நடைபெற்ற தேசிய மாநாட்டில் பங்குபற்றிய 400 அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆழமாகக் கலந்துரையாடினர். பின்னர், கொள்கைகளின் அடிப்படையில் ஒரு அடிப்படை உடன்பாட்டை எட்டியதோடு, 25 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய நிர்வாக சபையை ஸ்தாபித்தனர்.

மேற்படி மாநாட்டில் எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சிவில் சமூகக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் அடங்கிய பிரகடனங்களை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் திரு. டிரான்

அலஸிடம் ஒப்படைப்பதற்காக, 2023 ஜனவரி 31ஆம் திகதி அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அது உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

குறித்த ஆலோசனைகளை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட வரைபு தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், புதிய சட்டத்தினை அமைச்சரிடம் திணைக்களம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சர் அதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தினை பெற்ற பின்னர், இந்த புதிய சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எமது கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் எதிரான இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டால், எமது ஆட்சேபனையை தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, சட்ட நடவடிக்கைகளுக்கும் செல்ல வேண்டும். மேலும், அத்தகைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் தோல்வியடையச் செய்வதற்கான ஆதரவை பெறுவதற்கான பரிந்துரை செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். குறித்த நடவடிக்கைகள் வெற்றிபெறாவிட்டால், அத்தகைய நிலையை மாற்றியமைப்பதற்கு நீண்டகால தேசிய பரிந்துரை செயற்பாட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த அறிக்கையை தயாரிப்பதற்கும், தேவையான கூட்டங்களை ஒழுங்கமைப்பதற்கும் ஒத்துழைப்பு நல்கிய ரைட் டு லை.ஃப் மனித உரிமைகள் நிலையத்தின் தினிதி சுபேக்ஷலா, ரக்ஷ்மிகா விஜேசிங்க உள்ளிட்ட எனது அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், இலங்கை முழுதும் விரவிக் காணப்படும் சிவில் சமூக அமைப்புகளை ஒன்றிணைத்து இந்த கலந்துரையாடலை முன்னெடுக்க பங்களித்த மனித உரிமைகள் முதலுதவி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிலிப் திஸாநாயக்க**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
ரைட் டு லை.ஃப் மனித உரிமைகள் நிலையம்

# 1 சிவில் சமூக அமைப்புகளின் வரலாறு

உலகளாவிய சிவில் சமூக இயக்கத்திற்கு இணையாக, இலங்கை சிவில் சமூக இயக்கமும் மிக நீண்ட வரலாற்றை கொண்டுள்ளது. பேராசிரியர் ஜயதேவ உயங்கொடவின் கூற்றுப்படி, 1912-1915ஆம் ஆண்டின் தன்னடக்க இயக்கம் (Temperance movement) இலங்கையின் பழைமையான சிவில் சமூக இயக்கமாகும். இதைத் தொடர்ந்து சர்வோதய இயக்கம் (Sarvodaya movement), 1971 எழுச்சிக்குப் பிறகு உருவாக்கப்பட்ட சிவில் உரிமைகள் இயக்கம் (CRM), இனங்களுக்கு இடையிலான நீதி மற்றும் சமத்துவத்திற்கான இயக்கம் (MIRJE), ஜனநாயக உரிமைகளுக்கான இயக்கம் (MDDR), நிலத்திற்கான இயக்கம் மற்றும் விவசாய சீர்திருத்தம் (MOLNAR), காணாமல் போனவர்களின் பெற்றோர் மற்றும் குழந்தைகளின் அமைப்பு, சுதந்திரத்திற்கான தளம் (PFF) மற்றும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் (NMSJ) போன்றவற்றை சிவில் சமூக இயக்கங்களாக குறிப்பிடலாம்.

சிவில், அரசியல், சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளுக்காக கணிசமான எண்ணிக்கையிலான சிவில் அமைப்புகள் இலங்கை முழுவதும் இயங்கி வருகின்றன. சுற்றுச்சூழல் உரிமைகள், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் உரிமைகள், இறுதிச் சடங்குகள், கிராமப்புற மேம்பாடு, பெண்கள் மற்றும் இளைஞர் உரிமைகள், கடன் சங்கங்கள் மற்றும் சில அமைப்புகள் கிராமப்புற மற்றும் நகர்ப்புற சமூகங்களின் பல்வேறு தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன.

அரசு கட்டமைப்பிற்கு வெளியே செயற்படும் இந்த நிறுவனங்கள் அனைத்தும் அரசு சாரா நிறுவனங்கள் என்ற வகையின் கீழ் வருகின்றன. அறிக்கையின்படி, 44,000இற்கும் மேற்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் தற்போது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2023 ஜனவரிக்குள் 982 அமைப்புகள் மாவட்டச் செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன, 41,000 நிறுவனங்கள் மாவட்டச் செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 1730 நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எந்தவொரு அரசாங்க கட்டமைப்பிலும் இதுவரை பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கலாம்.

இந்த சிவில் அமைப்புகள் இலங்கையில் இயங்காமல் போயிருந்தால், மக்களின் அடிப்படை உரிமைகள், குற்றவியல் மற்றும் சிவில் சட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமைகள் மற்றும் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் உரிமைகள், சுற்றுச்சூழல் உரிமைகள், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் உள்ளிட்ட மனித உரிமைகள் பற்றிய மக்களின் அறிவும், அணுகுமுறைகளும் திறன்களும் மிகவும் குறைவாக இருந்திருக்கலாம். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் அவர்களின் செயற்பாட்டாளர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் பணியாற்றியதால் இந்த சிவில் அமைப்புகள் மக்களிடையே பிரபலமடைந்தன. இந்த சிவில் செயல்பாட்டின் மூலம் உலகின் புதிய அறிவு மற்றும் கலாச்சாரங்கள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன.

சில சமயங்களில் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக இவ்வாறு செயற்பட்ட சில சிவில் சமூக ஆர்வலர்கள் தமது உயிரைக் கூட விலையாகக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1988-89 காலத்தில், காணாமல் போனவர்களின் உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய சில

செயற்பாட்டாளர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகளுக்கு தகவல்களை அனுப்புவதற்கு உழைத்த சிலரை அரசாங்கம் கைதுசெய்தது.

மாத்தறையைச் சேர்ந்த சந்திரதாச ரணசிங்க என்பவர் மாத்தறை மாவட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பான தகவல்களை சேகரித்துக் கொண்டிருந்த போதே காணாமல் போயுள்ளார். மனித உரிமைகளுக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த எத்தனையோ மனிதர்களுக்கு இவர் ஒரு உதாரணம். இவர்கள் உயிரை தியாகம் செய்து சேகரித்த அறிக்கைகள், மஹிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார போன்ற எதிர்க்கட்சி எம். பி.க்களால் ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு கொண்டு செல்லப்பட்டன. ராஜபக்ஷ பின்னர் ஜனாதிபதியானார் மற்றும் நாணயக்கார அவரது அமைச்சரவையில் முன்னணி அமைச்சராக இருந்தார். சர்வதேச அழுத்தத்தின் காரணமாக அரசாங்கம் தனது அடக்குமுறையைத் தளர்த்த வேண்டியிருந்தது. அதன் காரணமாக கணிசமான எண்ணிக்கையிலான இளைஞர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன. அவர்களில் சிலர் பிற்காலத்தில் அரசியல்லும் அரச துறையலும் பிரதான பதவிகளை வகித்தனர்.

இத்தகைய மிக முக்கியமான மற்றும் மிகவும் ஆபத்தான நடவடிக்கைகளை இந்த சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் முன்னெடுத்தனர். சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான பரப்புரை செயற்பாட்டின் ஆரம்ப கட்ட தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சிவில் சமூக குழுக்கள் கடுமையான அடக்குமுறைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தாக்குதல்கள் காரணமாக சில தேர்தல் கண்காணிப்பாளர்கள் முடக்கப்பட்டனர். இவர்கள் செய்த செயற்பாடுகள் மற்றும் தியாகங்கள் காரணமாக, இந்த அமைப்புகள் கணிசமான புகழ் பெற்றன.

ஆனால், அப்போது தேசபக்தர்கள் என்று சொல்லிக் கொண்ட அரசாங்கங்களும், எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய சில உறுப்பினர்களும் இந்நிலையை மாற்றத் திட்டமிட்டனர். சமாதானம், நல்லிணக்கம், நிலைமாறுகால நீதி, மனித உரிமைகள் மற்றும் நிறுவன ரீதியில் செயற்படுதல், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றிற்காக உழைத்த சிவில் சமூக அமைப்புகளை மௌனிக்க வைக்க முனைந்தனர். அந்த நோக்கத்துடன், சிவில் சமூக அமைப்புகளை குறிவைத்து, அப்போதைய அரசாங்கங்களாலும் அவர்களுக்கு ஆதரவளித்த எதிர்க்கட்சிகளாலும் பாரிய அவதூறு மற்றும் பொய் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் சில அரச நிறுவனங்கள் மற்றும் சில தனியார் ஊடகங்கள் மூலம் கணிசமான அளவு ஆதரவு வழங்கப்பட்டது. இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊழல்வாதிகள் என்றும் சிலர் தீவிரவாத குழுக்களுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் பிரச்சாரம் செய்தனர். ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இந்தக் குற்றச்சாட்டுகளை அவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வந்தாலும், இது தொடர்பாக எவருக்கும் எதிராக எந்தவொரு சட்ட அமுலாக்கமோ அல்லது குறைந்தபட்சம் ஒரு விசாரணையோ முன்னெடுக்கப்பட்டதாக நாம் அறியவில்லை.

# 2 சிவில் சமூக அமைப்புகளை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளின் வரலாறு

சிவில் சமூக அமைப்புகளையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் கட்டுப்படுத்த பல அரசாங்கங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வந்துள்ளன. ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாக்க உழைக்கும் போர்வையில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு தவறான தகவல்களை வழங்குதல், வெளிநாட்டு நிதியை தவறாக பயன்படுத்துதல் மற்றும் சில நிறுவனங்கள் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை குலைத்து அதிகாரத்தில் இருந்து அகற்ற முயற்சித்தல் போன்றன, அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது சுமத்தப்படும் வலுவான குற்றச்சாட்டுகள் ஆகும்.

இலங்கையின் உள்நாட்டு போர் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் என்பவற்றுடன் மற்றுமொரு குற்றச்சாட்டும் சேர்ந்து கொண்டது. அதாவது, நாட்டின் தேசிய பாதுகாப்பு, இறைமை, ஒற்றையாட்சி தன்மை, சுதந்திரம் மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துதல் என்பனவே அவை.

அதற்கும் மேலதிகமாக அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகத்தில் பெருமளவு ஊழல் மோசடி முறைகேடுகள் இடம்பெறுவதாகவும் இவற்றில் வெளிப்படை தன்மையோ பொறுப்பு கூறுதலோ இல்லை என்றும் அரசாங்கம் கூறுகின்றது.

சிவில் சமூக அமைப்புகள் மீது சுமத்தப்படும் இந்த குற்றச்சாட்டுகள் மிகவும் பாரதூரமானவை என்பதோடு இத்தகைய குற்றச்சாட்டுகள் இருப்பின் அவற்றை நாங்களும் மிகவும் பாரதூரமாக கருதுகின்றோம். இவை தொடர்பில் நடைமுறையில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம். அனால் இவற்றுக்காக புதிய சட்டங்களை இயற்றும் தேவையை நாம் காணவில்லை.

மோசடி, ஊழல் முறைகேடுகள் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவும் அனுசரணையும் வழங்குதல் என்பவற்றை தண்டனை கோவையினூடாகவும், 2005ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம், 2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம், 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்க பணச் சலவை தடுப்பு சட்டம் என்பவற்றினுடாகவும் நடவடிக்கை எடுக்கலாம். குற்றவியல் விசாரணை திணைக்களம், நிதி மோசடி விசாரணைப் பிரிவு, பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு போன்ற அமைப்புக்கள் அரச புலனாய்வு சேவைகளை பயன்படுத்தி தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்.

அத்துடன் வேறேதும் சிவில் அல்லது நிர்வாக பிரச்சினைகள் இருப்பின், யாருக்கும் நட்டம் ஏற்படின், யாரேனும் ஒருவருக்கு நட்டஈடோ நிவாரணமோ தேவைப்படின், இவை அனைத்திற்கும் சிவில் சட்டத்தில் பரிகாரமுண்டு. ஆகவே சிவில் அமைப்புகளுக்கான புதிய சட்டம் கொண்டு வரப்படுவது ஒருபோதும் நியாயப்படுத்தப்பட முடியாதது.

ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்படுவதாக இருப்பின் அது நமது அரசமைப்பு சட்டம் மற்றும் அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையினதும் கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். சிவில் சமூக அமைப்புகள் தொடர்பான புதிய சட்டங்கள் வரையப்படும்போது சிவில் சமூக அமைப்புகளின் கருத்துக்கள் கோரப்பட்டு அவர்களின் பார்வைகளும் அக்கறைகளும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

# 3 சிவில் சமூக அமைப்புக்களை நெறிப்படுத்த பாராளுமன்றத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள்

- **பாராளுமன்ற சிறப்புக் குழு - 2005 - (நந்தன குணதிலக / விஜித ஹேரத் அறிக்கை)**

அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் அவற்றின் தாக்கங்களையும் விசாரிக்கவென 23 பேர் அடங்கிய பாராளுமன்ற சிறப்புக் குழுவொன்று ஓகஸ்ட் 30, 2005 அன்று அன்றைய மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நந்தன குணதிலக தலைமையில் நியமிக்கப்பட்டது. பின்பு நந்தன குணதிலக தனிப்பட்ட காரணங்களுக்காக குழுவின் தலைமை பொறுப்பிலிருந்து விலக அதே கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டார்.

இந்த குழுவானது இலங்கையில் செயற்படுவதற்காக வெளிநாட்டில் இருந்து நிதி பெறும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள், இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகளின் வெளிப்படை தன்மை என்பவற்றை விசாரித்தல், அவற்றின் நடவடிக்கைகள் எந்த விதத்தில் நாட்டின் இறைமையையும் தேசிய பாதுகாப்பையும் பாதித்தது என அடையாளம் காணுதல், இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் தொழிற்பாடுகள் தேசிய மற்றும் சமூக நலனில் எந்தளவு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்று அடையாளம் காணுதல், இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் செயற்பட்ட விதம் குறித்து விசாரித்து தேவையான பரிந்துரைகளை செய்யும் நோக்கத்துடனான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும் பொருட்டான சிறப்புக் குழுவாக செயற்பட்டது.

குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் கீழ்வருமாறு

1. அரச சார்பற்ற அமைப்புகளின் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக்கூறலையும் அதிகரிக்கும் விதத்தில் ஒரு ஒழுங்கான சட்ட முறைமையை நெறிப்படுத்தி அறிமுகப்படுத்துதல் மற்றும் 1980ஆம் ஆண்டு 31ஆம் இலக்க சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தினை அகற்றி புதியதொரு சட்டத்தை உருவாக்குதல்.

2. அரச சார்பற்ற நிறுவனங்களின் மேற்பார்வைக்காக சட்ட ஏற்பாடுகளை செய்யும் வகையில் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட குழுவொன்றை அமைத்தல். இலங்கையில் இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முறையான வரைவிலக்கணம் இல்லாத நிலையிலும் சட்டத்தில் உள்ள வரைவிலக்கணம் போதாமையாலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வேறெந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இந்த குழுவின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமென பரிந்துரைத்தது.

3. இந்த அறிக்கையானது தன்னார்வ சமூக நிறுவனங்களை அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களை “உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆதரவுடன், உள்நாட்டு சட்ட மற்றும் கொள்கை வரையறைகளுக்கு ஒத்திசைவான செயற்பாட்டு விதிகளையும் நிர்வாக கட்டமைப்பையும் கொண்டு, சமூக பாதுகாப்பு, நலன் மற்றும் வளர்ச்சியை நோக்கிய, இலாப நோக்கற்ற தன்னார்வ பணிக்காக அரசாங்கத்துடன் எந்த ஒப்பந்தமும் இல்லாது ஒரு தனி நபர் அல்லது ஒரு பல நபர்களினால்

உருவாக்கப்படும் அனைத்து அமைப்புகளும்'' என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

4. அறிமுகப்படுத்தப்படும் குழுவின் செயற்பாடுகளும் அதிகாரங்களும், அரச சார்பற்ற நிறுவங்களை பதிவு செய்யும் கொள்கைகள், நிர்வாகம் மற்றும் மேற்பார்வைக்கான கொள்கைகள், கணக்காய்வு மற்றும் விசாரணைக்கான சட்ட ஏற்பாடுகள் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

5. இந்த குழுவின் அதிகாரங்கள் மாவட்ட மற்றும் பிராந்திய வழிகாட்டல் குழுக்களுக்கு பரவலாக்கப்படல் வேண்டும். மாவட்ட மற்றும் பிராந்திய அளவில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை அரச இயந்திரத்துடன் இணைக்கும் வகையில் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

6. அரச சார்பற்ற நிறுவனங்களின் கட்டாய பதிவு. ''இலங்கையில் கணிசமான எண்ணிக்கையில் பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்கி வருவதால் இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப்படுவதை கட்டாயமாக்க வேண்டும் என்பதோடு அந்த பதிவு நாட்டின் அடிப்படை சட்டத்திற்கும் குழுவினால் முன்வைக்கப்படும் நிபந்தனைக்கும் உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

- **தேசிய பாதுகாப்புக்கான துறைசார் மேற்பார்வை குழு - 2020 (மலித் ஜயதிலக அறிக்கை)**

இனக்குழுக்களுக்கும் மதங்களுக்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அதேவேளை புதிய பயங்கரவாதங்கள் தீவிரவாதங்களை அழிக்கும் நோக்கிலான தேசிய பாதுகாப்பு தொடர்பிலான சட்டங்களையும் விதிகளையும் உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய பாதுகாப்புக்கான துறைசார் மேற்பார்வை குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் பெப்ரவரி 19, 2020 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த குழுவின் தலைமைத்துவத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மலித் ஜயதிலக நியமிக்கப்பட்டதோடு வேறு 16 அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டனர்.

இந்த அறிக்கையிலும் சிவில் சமூகம் அதன் நடவடிக்கைகள், நிர்வாகம் என்பன தொடர்பிலான பரிந்துரைகள் உள்ளடங்கி இருந்தன. இந்த அறிக்கைக்கு போர்க்காலத்தில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரசு சார்பற்ற நிறுவனங்கள் வடக்கு கிழக்கு பகுதிகளில் செய்த செயற்பாடுகளை குறித்தான ஆதரவு மக்களிடம் இருந்ததாக அவர்கள் கூறிய எதிப்புக்களையும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் போது கண்டறியப்பட்டதாக இந்த குழு குறிப்பிடுகின்ற அரச சார்பற்ற நிறுவன பதிவு தொடர்பான பிரச்சினையையும் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறியும் பிரிவு மற்றும் தேசிய புலனாய்வு சேவையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களையும் அடிப்படையாக கொள்ளப்பட்டது. அதன்படி சிவில் சமூகத்திற்கும் பண சலவைக்கும் பயங்கரவாதத்திற்கும் நிதியளித்தலுக்கும் தொடர்பிருக்கிறது என்ற கருத்தின் அடிப்படையில் இந்த குழு தனது பரிந்துரைகளை வழங்கியது.

இக்குழு சிவில் சமூக அமைப்புக்களை அரசாங்கம் தீவிரமாக கண்காணிக்க வேண்டுமென வலியுறுத்தியது. அத்தோடு நடப்பு அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத்தினால் நிறைவேற்றாமல் கைவிடப்பட்ட தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவும் மேற்பார்வையும்) திருத்தச் சட்ட மூலத்தின் ஏற்பாடுகளை வர்த்தமானி மூலம் வெளியிட்டு அதனை நிறைவேற்றுவதற்கான தேவையும் வலியுறுத்தப்பட்டது. மத்திய வங்கியின் நிதியியல் உளவறியும் பிரிவு, தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைமை, அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான செயலகம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டான திட்டத்தின் மூலம் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதி பெறுவதை நெறிப்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தின்

கீழ் வெளிநாட்டு நிதி பங்களிப்பை நெறிப்படுத்தல் சட்டம் போன்றதொரு சட்டத்தை உருவாக்கல், இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு நிதியை முறையாக கணக்காய்வு செய்தல் போன்ற பல்வேறு பரிந்துரைகளும் வழங்கப்பட்டன.

பரிந்துரைகள்

1. தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவும் மேற்பார்வையும்) திருத்தச் சட்ட மூலத்தின் ஏற்பாடுகளை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு உள்ள தடைகளை உடனடியாக நீக்குதலும் அதனை வர்த்தமானியில் பிரசுரித்தலும்.

2. பொது கொள்கையின் அடிப்படையில், அரச சார்பற்ற நிறுவனங்கள் செயலகமானது சமூக சேவைகள் அமைச்சின் கீழோ பாதுகாப்பு அமைச்சின் கீழோ செயற்பட வேண்டும்.

3. அரச சார்பற்ற நிறுவன செயலகத்தில் பதிவு செய்யாமல் இயங்கும் அமைப்புக்களை சட்டவிரோத அமைப்புகளாக அறிவித்தலும் அந்நிறுவனங்களுக்கு எதிரான தண்டனைகளை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்தலும். குறிப்பாக 2003ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் இலாப நோக்கற்ற, உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளாக பதிவு செய்து தன்னார்வு நிறுவனங்களாக இயங்கும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

4. இலங்கைக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வழியாக வருகின்ற அனைத்து நிதியையும் உதவிகளையும் முழுமையாக நெறிப்படுத்த வசதியாக மத்திய வங்கியின் நிதியியல் உளவறியும் பிரிவையும் தேசிய புலனாய்வு தலைமையையும் ஒன்றிணைக்கும் வகையிலான பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்தல்.

5. வெளிநாட்டு நிதி பங்களிப்பு நெறிப்படுத்தல் சட்டம் போன்ற ஒரு சட்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு நிதி உதவிகளை அரச சார்பற்ற நிறுவன செயலகத்தின் ஊடாக முறையான கணக்காய்வுக்கு உட்படுத்துதல். சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் பொதுவாக பயன்படும் வகையில் நெறிப்படுத்துதல்.

6. பெருமளவான நாடுகளில் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் ஒரே இடத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது போல இலங்கையிலும் அவை அரச சார்பற்ற நிறுவன செயலகத்தில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.

7. ஒரு குறிப்பிட்ட மத குழுவுக்கு மட்டும் நன்மை தரக்கூடிய மன்றங்கள், நம்பிக்கை பொறுப்பு நிதியங்கள், நிதிகள் மற்றும் நிறுவனங்கள் போன்றவை தனிநபர் பிரேரணை மூலமாக சட்டமாக்கப்படுவதை தடுக்கும் வகையில் பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளுக்கு உரிய திருத்தங்களை கொண்டுவரல். பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்படுகின்ற மன்றங்கள், நம்பிக்கை பொறுப்புக்கள், நிதிகள் என்பவற்றின் இயக்குனர் குழுக்கள் ஒரு குடும்பத்திற்கோ, உறவினரான சில குடும்பங்களுக்கோ மட்டுப்பட்டதாக இல்லாதிருப்பதை உறுதி செய்தல்.

8. உத்தேச சமூக சேவை நிறுவனங்கள் (பதிவும் மேற்பார்வையும்) திருத்தச் சட்ட மூலத்தில் “அவசர நிலைகளில் அரச சார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்தல்” என்ற சரத்தை நீக்க பாராளுமன்ற குழுவில் நடவடிக்கை எடுத்தல். இதற்கு காரணம் இதன் மூலம் பதிவு தொடர்பான அடிப்படை சட்டத்தில் ஒரு இடைவெளியை ஏற்படுத்த முடியும் என்பதாகும்.

# 4 தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம்

### அமைச்சரவை பத்திரம் - 20 பெப்ரவரி 2018

மேலே குறிப்பிடப்பட்ட நந்தன குணதிலக்க.'. விஜித ஹேரத் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் வழிகாட்டுதலின்படி, 1980ஆம் ஆண்டு 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்பு (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு, தேசிய சகவாழ்வு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய விவகாரங்களுக்கான அப்போதைய அமைச்சர் திரு. மனோ கணேசன் அவர்களால் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டது.

இந்த திருத்தங்கள் தொடர்பில் சிவில் சமூகத்தின் கருத்துக்களை தெரிவிக்குமாறு அமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உரிய பதில்கள் கிடைக்காத காரணத்தினால், அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதியன்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர். இதன்போது எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு அமைவாக, மேற்படி அமைச்சரவை பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

பின்னர், இந்த வரைவுக்கு உரிய திருத்தங்களைச் சமர்ப்பிக்குமாறு சிவில் சமூகப் பிரதிநிதிகள் அடங்கிய குழு வழங்கிய அறிவித்தலின்படி, நாடளாவிய ரீதியில் உள்ள ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புக்களின் 233 பிரதிநிதிகளுடன் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆலோசனை நடத்தப்பட்டது. 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் திருத்தம் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டம் தொடர்பாக குறித்த பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், அமைச்சரிடமும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான செயலகத்திடமும் கையளிக்கப்பட்டன.

எனினும், 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர், இச்செயன்முறை மீண்டும் முற்றாக முடங்கியது. அத்தோடு, தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய விவகாரங்கள் அமைச்சின் கீழிருந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் மீண்டும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பின்னர், அரசு சாரா நிறுவனங்கள் தொடர்பான செயலகத்திற்கு, 2020 ஜூன் மாதம் புதிய பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர், 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் திருத்தச்சட்டத்தை (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) திருத்துவதற்கான முன்மொழிவுகளுக்கு அழைப்பு விடுத்தார். சிவில் சமூகத்தினரால் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள், மீண்டும் 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவரிடம் பரிந்துரைக்கப்பட்டது.

### அமைச்சரவை பத்திரம் - 2021 ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில், மீண்டும் 1980 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சட்ட திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர், பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம், வெளிவிவகார அமைச்சுக்கு மாற்றப்பட்டு, சிறிது காலத்தின் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

# 5 சட்டச் சீர்திருத்தங்கள் குறித்த சிவில் சமூகத்தின் அடிப்படைகள்

சிவில் சமூக அமைப்புகளுக்கான விசேட புதிய சட்டம் ஒன்று அவசியமில்லை என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம். ஆனால் எந்தவொரு விடயத்திலும் சிவில் சமூக அமைப்புகளை இலக்கு வைத்து அரசாங்கம் புதிய சட்டங்களைக் கொண்டுவருமாயின், அந்தச் சட்டங்கள் பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

1 கருத்துச் சுதந்திரம், நிறுவன ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்கும் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படை உரிமைகளை மதிக்கும் வகையிலான சட்டம்.

2 அரசு சாரா நிறுவனங்களை சமமான முறையில் நடத்துதல் மற்றும் பாரபட்சம் காட்டாமை

3 அரசாங்கத்தின் தேவையற்ற தலையீடுகளை நிறுத்துதல், நிறுவனம் சுதந்திரமாக செயற்படுவதற்கு அனுமதித்தல் மற்றும் நிறுவனம் சுயாதீனமாக செயற்படுவதற்கு அவற்றின் பெறுமதிகளை மதித்தல்.

4 தேவைக்கேற்ப ஏனைய நிறுவனங்கள் அல்லது குழுக்களுடன் வலையமைப்பை கட்டியெழுப்புதல், தொடர்பாடலை பேணுதல் மற்றும் ஒத்துழைப்பதற்கான உரிமையை மதித்தல்.

5 சட்டப்பூர்வமாக பெறப்பட்ட நிதியை நிறுவனத்தின் நோக்கங்களுக்கும் மூலோபாயங்களுக்கும் செலவிடுவதற்கான சுதந்திரத்தை வழங்குதல்

6 சிவில் சமூக அமைப்புகளை இலக்காகக் கொண்ட சட்டங்களுக்கு அந்த அமைப்புகளின் கருத்துக்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் சட்டங்கள் இயற்றப்பட்டால் அவை சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

7 சிவில் சமூக அமைப்புகள் சிறப்பாக இயங்குவதற்கான சூழலை நாட்டில் உருவாக்குதல்.

**பல முறைகளின் கீழ் தற்போது அரச சார்பற்ற அமைப்புகளை பதிவுசெய்ய முடியும்.**

1 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் திருத்தச் சட்டம் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்)

2 கம்பனிகள் சட்டம்

3 நம்பிக்கை பத்திரம் மூலமான நம்பிக்கை ஊடாக.

4 சங்க கட்டளைச் சட்டம்

5 தொழிற்சங்க கட்டளைச் சட்டம்

6 கூட்டுறவு சங்க கட்டளைச் சட்டம்

7 பாராளுமன்ற சட்டங்களால் பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளைகள், அறநிலையம் மற்றும் அமைப்புகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு சட்டத்தின் கீழும் பதிவுசெய்யாமல் ஒரு அமைப்பாக செயற்படும் சுதந்திரம், அரசியலமைப்பின் 14(1)(டி) மற்றும் (உ)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றுகூடுதல் மற்றும் நிறுவனமாக செயற்படுவதற்கான சுதந்திரத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யாமல் குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்த நிறுவனங்களாக, சிவில் உரிமைகள் இயக்கம், சுதந்திரத்திற்கான மேடை மற்றும் நீதியான சமுதாயத்திற்கான தேசிய இயக்கம் போன்ற அமைப்புகளை குறிப்பிடலாம்.

# 6 சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பரப்புரை பிரச்சாரத்தின் நாட்குறிப்பு

1 முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் 2018ஆம் ஆண்டு மார்ச் 27ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பில் அமைச்சரவைப் பத்திரத்தை மீளப்பெற சம்மதிக்கப்பட்டது.

2 2018ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2019 ஜூன் வரை, சட்டத் திருத்தத்திற்காக 9 மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் அமைப்புகளின் 233 பிரதிநிதிகளின் கருத்துக்கோரல்.

3 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் - சிவில் சமூக அமைப்புகளின் கொள்கைகளும் கோட்பாடுகளும் பற்றிய 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சட்டத்தின் திருத்தத்திற்கான சிவில் சமூக பிரதிநிதிகளின் முன்மொழிவுகளை உள்ளடக்கிய திருத்தங்களை, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்திடமும் ஒப்படைத்தல்.

4 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் - ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தின் பணிப்பாளரிடம் சிவில் சமூகங்களின் முன்மொழிவுகளை பரிந்துரைத்தல்.

5 2021 செப்டெம்பர் 16 முதல் 2022 ஓகஸ்ட் 27 வரை - 9 மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 677 அமைப்புகளுடன் கலந்துரையாடிய பின்னர், 2019ஆம் ஆண்டு நாம் முன்வைத்த சிவில் சமூகத்தினது முன்மொழிவுகளை மேலும் மேம்படுத்துதல். உள்ளூர் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் அடங்கிய அறிக்கையை தயாரித்தல்.

6 2022 செப்டெம்பர் 23 - திருத்தப்பட்ட சட்டம் தொடர்பாக, அப்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுடன் சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்துரையாடல்களை ஆரம்பித்தனர்.

7 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் - அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தின் புதிய பணிப்பாளராக திரு சஞ்சீவ விமலகுணரத்ன நியமிக்கப்பட்டதோடு, அவருடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

8 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி - கடந்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தொடர்பான வரைவு ஆவணத்தை சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு உத்தியோகபூர்வமாக வழங்குதல். அமைச்சருடன் இடம்பெற்ற இரண்டாவது கலந்துரையாடலில், குறித்த ஆவணத்திற்கு சிவில் சமூக அமைப்புகளின் முழுமையான எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டது.

9 வரைபை வாபஸ் பெறுவதற்கும், சிவில் சமூகத்துடன் இணைந்து புதிய சட்டத்தை உருவாக்குவதற்கும், அமைச்சருடன் இடம்பெற்ற மூன்றாவது கலந்துரையாடலில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

10 2022ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி - சிவில் சமூக அமைப்புக்கள் எதிர்நோக்கும் நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பாக, புதிய பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடப்பட்டது

11 2023ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி, 400 அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மாநாடு இலங்கை மன்றத்தில் நடைபெற்றது.

திட்டங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் புதிய சட்டம் தொடர்பாக சிவில் சமூக அமைப்புகள் கலந்துரையாடின.

12 சிவில் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை, அமைச்சரிடம் கையளிப்பதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் 2023 ஜனவரி 31ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

# 7 உள்நாட்டு நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் தீர்வு முன்மொழிவுகளும்

பிரச்சினைகள் தீர்வு முன்மொழிவுகள்

| | | |
|---|---|---|
| 01 | அரச சார்பற்ற நிறுவன செயலகத்திலும் பிரதேச செயலர், மாவட்ட செயலர் அலுவலகங்களிலும் உள்ள சில அதிகாரிகளின் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான குரோத மனப்பாங்கை மாற்றுதல். | அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் சேவைகள், நடவடிக்கைகள் பற்றிய ஆய்வின் பின்னர் அவர்கள் நாட்டுக்கு கொண்டுவரும் அந்நிய செலாவணி குறித்தும் சேவைகள் குறித்தும் உரிய மதிப்பை அளித்தல். |
| 02 | சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது பாகுபாடு கட்டுதல் | அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் சமமாக நடத்துதல். பாரபட்சமின்றி செயற்படுவதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்துதல். பாகுபாடு காட்டுதலை விசாரிக்க அலகு ஒன்றை ஏற்படுத்துதல். |
| 03 | அரச சார்பற்ற நிறுவன செயலகத்தின் நோக்கங்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் அதன் மட்டுப்பாடுகள், சட்ட வரையறைகள் பற்றிய போதிய புரிதல் இன்மை | அரச சார்பற்ற நிறுவன செயலகத்தின் முதன்மை நோக்கத்தை அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் என்பதாக ஆக்குதல். பல்வேறுபட்ட திட்டங்களை கூட்டாக தயாரிப்பதால் மூலம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு செயலகத்தின் சட்ட நிலை பொறுப்புக்கள் பற்றி புரியவைத்தல். |
| 04 | செயலகத்தின் முன்னாள் இயக்குநர் மற்றும் பதிவாளரின் பல்வேறுபட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் தவறான அணுகுமுறைகள் மீண்டும் ஏற்படாதிருக்க அந்த பதவிகளின் மதிப்பை காக்கும் வண்ணம் அவர்களது பொறுப்புக்களை நிர்ணயம் செய்தல். | இயக்குநரின் பொறுப்புக்களையும் சட்ட எல்லைகளையும் தெளிவு படுத்தி அரச சார்பற்ற நிறுவன செயலகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இடையேயான தொழில்முறை உறவை மேம்படுத்துதல். |
| 05 | சில மாவட்ட, பிரதேச செயலர் அலுவலகங்களில் உள்ள அரச சார்பற்ற நிறுவன ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான ஆதிக்க மனோபாவம். | மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் அவரவர் சட்ட எல்லைக்குள்ளும் பணியாற்றுமாறு அறிவுறுத்துதலும் அவர்களை கண்காணித்தலும். இரு தரப்பாரது பிரச்சினைகளை பேசித் தீர்க்க வாய்ப்பளித்தல். |
| 06 | பிரதேச செயலர், கிராம அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளிடமிருந்து திட்ட நடவடிக்கைகளுக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம். சில வேளைகளில் பலதரப்பட்ட அறிக்கைகள் கோரப்படலும் அவற்றை வெவ்வேறு அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டியிருத்தலும். | திட்ட நடவடிக்கைகளுக்கான அனுமதி முறையை மீள் பரிசீலித்தல். அனுமதி தேவைப்படின் அனுமதிக்கும் அறிக்கை செய்தலுக்கும் எளிமையான ஒரு முறையை ஏற்படுத்தல். அந்த அறிக்கைகளை இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணமாக பயன்படுத்தல். |

| | | |
|---|---|---|
| 07 | உள்ளூராட்சி சபைகள் பிரதேச செயலகங்களிடம் திட்ட நடவடிக்கைகளுக்கான அனுமதியை பெறுவதில் உள்ள சிரமங்கள். | அனைத்து திட்ட நடவடிக்கைகளுக்குமான அனுமதி முறையை மீள் பரிசீலித்தல். தேவையான திட்டங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கல். |
| 08 | தரைப்படை, வான்படை, கடற்படை, பொலிஸ் மற்றும் அரச புலனாய்வு நிறுவனங்கள் அடிக்கடி வருகை தந்து பல்வேறுபட்ட அறிக்கைகளையும் தகவல்களையும் கோருதல் | இத்தகைய தகவல்கள் தேவைப்படுமிடத்து அவற்றை சிவில் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முறைமை ஒன்றை உருவாக்கல். பாதுகாப்பு படையினரின் ஆளுமை செலுத்துதல், அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகளை தடுத்தல். ஒரு குறிப்பிட்ட முறைப்பாடோ அல்லது ஒரு நிறுவனம் மீதான விசாரணை செயற்பாடு இல்லாத நிலையில் பாதுகாப்பு படையினரின் தலையீட்டை நிறுத்துதல். |
| 09 | சில நிறுவன செயற்பாட்டாளர்களின் தனிப்பட்ட இல்லங்களுக்கு பாதுகாப்பு படையினர் சென்று தகவல்கள் கோருதல் (செயற்பாட்டாளர்கள் வீட்டில் இல்லாதபோது வந்ததாக தகவல் கிடைத்துள்ளது) இதன் காரணமாக வீட்டார் அச்சமுற்றுள்ளனர். | தகவல் பெறுதல் என்ற போர்வையில் நிறுவன செயற்பாடுகளை அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதை தடுத்தல். ஒரு நிறுவனம் பற்றிய தகவல்கள் தேவைப்படின் ஒரு முறையான வழியினூடாகவே நிறுவனத்திற்கு வருகை தருதல் |
| 10 | வேறு மாவட்டங்களில் பணி செய்யும் போது வரும் சிரமங்கள் | நிதி வலிமை மற்றும் இயலுமை இருக்கின்ற நிறுவனங்களுக்கு அத்தகைய சிக்கல்களை நீக்குதல். |
| 11 | அரச அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் நிறுவனங்களுக்கு செயலகங்களினால் வழங்கப்படும் அதே அளவான ஆதரவு மற்ற திட்டங்களை முன்னெடுக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதில்லை | அபிவிருத்தி சமாதானம் சூழல் மனித உரிமைகள் இவை அனைத்திலும் பணிபுரியும் நிறுவனங்களை சமமாக நடத்துதல். |
| 12 | புதிய நிறுவனங்களை பதிவு செய்வதில் உள்ள சிக்கல்கள் | புதிய நிறுவனங்களை பதிவு செய்வதில் உள்ள விதிகளையும் நடைமுறைகளையும் தளர்த்துதல் மூலம் நிறுவன பதிவு செய்தலுக்கு வாய்ப்பளித்தல். |
| 13 | அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இடையேயான பரஸ்பர ஒத்துழைப்பு தடைபடுதல். | அமைச்சுக்கும் அரச சார்பற்ற நிறுவன செயலகத்துக்கு இடையே தொடர்பாடல் முறையொன்றை ஏற்படுத்தி இரு தரப்பினரிடையேயும் உள்ள முரண்பாடுகளை தீர்த்து ஒத்துழைப்பை வலுப்படுத்துதல். |

# 8 பிராந்திய ரீதியான கலந்துரையாடல்கள்

2021 செப்டெம்பர் 16 முதல் 2023 மே 13 வரை இக்கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

ஸூம் செயலி ஊடாக 7 கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன

| | மாவட்டம் | திகதி | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | வளவாளர்கள் |
|---|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் மாவட்டம் | 2021.9.16 | 18 | ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க |
| 02 | சப்ரகமுவ மாகாணம் | 2021.09.18 | 40 | ருக்கி பெர்ணான்டோ, சட்டத்தரணி அர்மிசா டீகல், திலக் காரியவசம், ரோஹண ஹெட்டியாராச்சி, பிலிப் திஸாநாயக்க |
| 03 | ஊவா மாகாணம் | 2021.09.25 | 50 | ருக்கி பெர்ணான்டோ, சட்டத்தரணி அர்மிசா டீகல், ரோஹண ஹெட்டியாராச்சி, பிலிப் திஸாநாயக்க |
| 04 | காலி மாவட்டம் | 2021.09.26 | 57 | ருக்கி பெர்ணான்டோ, திலக் காரியவசம், ரோஹண ஹெட்டியாராச்சி, குமுதினி சாமுவேல், பிலிப் திஸாநாயக்க |
| 05 | மாத்தறை மாவட்டம் ஹம்பாந்தோட்டை மாவட்டம் | 2021.09.30 | 58 | சட்டத்தரணி அர்மிசா டீகல், பிலிப் திஸ ாநாயக்க, சட்டத்தரணி நதீசானி பெரேரா |
| 06 | குருநாகல் மாவட்டம் | 2021.10.07 | 26 | கலாநிதி ஜெஹான் பெரேரா, ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க |
| 07 | புத்தளம் மாவட்டம் | 2021.10.18 | 33 | ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க, சட்டத்தரணி அர்மிசா டீகல், சமன் ஹமன்கொட |
| | மொத்தம் | | 282 | |

பிராந்திய ரீதியான கலந்துரையாடல்கள் - 19

| | மாகாணம் / மாவட்டம் | திகதி | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | வளவாளர்கள் |
|---|---|---|---|---|
| 01 | கம்பஹா | 2021.10.25 | 34 | திலக் காரியவசம், ரோஹண ஹெட்டியாராச்சி, சமன் ஹமன்கொட, ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க, சமிந்த ராஜகருண |
| 02 | களுத்துறை | 2021.11.09 | 35 | திலக் காரியவசம், பிலிப் திஸாநாயக்க, சட்டத்தரணி அர்மிசா டீகல், சமிந்த ராஜகருண |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | வட மத்திய மாகாணம் (ஹபரண) | 2022.02.27 | 15 | ருக்கி பெர்ணான்டோ, திலக் காரியவசம், கலாநிதி ஜெஹான் பெரேரா, பிலிப் திஸ ாநாயக்க |
| 04 | மத்திய மாகாணம் (கண்டி) | 2022.02.28 | 20 | ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க, திலக் காரியவசம் |
| 05 | காலி | 2022.03.22 | 45 | ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க கலாநிதி ஜெஹான் பெரேரா, சட்டத்தரணி நதீக்ஷானி பெரேரா |
| 06 | மாத்தறை | 2022.03.22 | 42 | ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க கலாநிதி ஜெஹான் பெரேரா, சட்டத்தரணி நதீக்ஷானி பெரேரா |
| 07 | குருநாகல் | 2022.03.29 | 30 | திலக் காரியவசம் |
| 08 | கேகாலை | 2022.04.02 | 20 | திலக் காரியவசம் |
| 09 | பதுளை | 2022.04.02 | 60 | கௌதம் பாலச்சந்திரன், பிலிப் திஸாநாயக், சுரேக்ஷ் நடேசன் |
| 10 | ஹம்பாந்தோட்டை | 2022.08.20 | 29 | பிலிப் திஸாநாயக்க, சட்டத்தரணி துலான் திஸாநாயக்க, திலக் காரியவசம் |
| 11 | மொனறாகல | 2022.08.21 | 41 | பிலிப் திஸாநாயக்க, சட்டத்தரணி துலான் திஸாநாயக், திலக் காரியவசம் |
| 12 | களுத்துறை | 2022.08.24 | 26 | பிலிப் திஸாநாயக்க, சட்டத்தரணி துலான் திஸாநாயக்க, திலக் காரியவசம் |
| 13 | ஹட்டன் | 2022.08.27 | 18 | பிலிப் திஸாநாயக்க, சட்டத்தரணி துலான் திஸாநாயக்க, திலக் காரியவசம் |
| 14 | கம்பஹா | 2022.08.23 | 15 | திலக் காரியவசம், பிலிப் திஸாநாயக்க, கலாநிதி ஜெஹான் பெரேரா, ஜெஹான் திகதீசன் |
| 15 | அநுராதபுரம் | 2022.11.05 | 30 | கலாநிதி ஜெஹான் பெரேரா, திலக் காரியவசம், ருக்கி பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க, |
| 16 | குருநாகல் | 2022.11.06 | 20 | கலாநிதி ஜெஹான் பெரேரா, திலக் காரியவசம், பிலிப் திஸாநாயக்க |
| 17 | மாத்தறை | 2023.02.18 | 32 | கலாநிதி ஜெஹான் பெரேரா, சட்டத்தரணி துலான் திஸாநாயக்க, பிலிப் திஸாநாயக்க |
| 18 | கந்தளாய் | 2023.04.30 | 28 | சட்டத்தரணி துலான் திஸாநாயக்க, பிலிப் திஸாநாயக்க, சட்டத்தரணி லக்க்ஷான் பெர்ணான்டோ |
| 19 | பதுளை | 2023.05.13 | 35 | சட்டத்தரணி லக்க்ஷான் பெர்ணான்டோ, பிலிப் திஸாநாயக்க, சுரேக்ஷ் நடேசன் |
| | மொத்தம் | | 575 | |

# 9 பரிந்துரைகள்

1. எவ்வித பாரபட்சங்களும் இன்றி சகல அரச சார்பற்ற நிறுவனங்களையும் அரசாங்கம் சமமாக நடத்த வேண்டும்.

2. அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம், நிறுவனமாக இணைந்து செயற்படும் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

3. அரசாங்கத்தின் தேவையற்ற தலையீட்டை நிறுத்துதல் மற்றும் நிறுவனத்தின் சுதந்திரத்திற்கும் பெறுமதிகளுக்கும் மதிப்பளித்து சம்பந்தப்பட்ட அரசு சாரா நிறுவனங்களை சுதந்திரமாக செயற்படுவதற்கு அனுமதித்தல்.

4. தேவைக்கேற்ப ஏனைய நிறுவனங்கள் அல்லது குழுக்களுடன் வலையமைப்பை கட்டியெழுப்புதல், தொடர்பாடலை பேணுதல் மற்றும் ஒத்துழைப்பதற்கான உரிமையை மதித்தல்.

5. சட்டப்பூர்வமாக பெறப்பட்ட நிதியை நிறுவனத்தின் நோக்கங்களுக்கும் மூலோபாயங்களுக்கும் செலவிடுவதற்கான சுதந்திரத்தை வழங்குதல்.

6. சட்டத் சீர்திருத்தங்களின் போது சிவில் சமூக அமைப்புகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்.

7. சிவில் சமூக அமைப்புகளை நிர்வகிக்க சட்டங்கள் இயற்றப்பட்டால் அவை சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

8. சிவில் சமூக அமைப்புகள் சிறப்பாக இயங்குவதற்கான சூழலை நாட்டில் கட்டியெழுப்புதல்.

9. சிவில் சமூக அமைப்புகளுக்கான சேவை மதிப்பீட்டு முறையை உருவாக்குதல்.

10. சிவில் அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட ஒழுக்க விதிமுறைக்களுக்குள் செயற்படுவதற்கு அவர்களை ஊக்குவித்தல்.

# மூலங்கள்:

1. இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிர்நோக்கிய சவால்கள் (சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் தேசிய கூட்டணியினது பிரசுரம்)

2. தேசிய பாதுகாப்பு குறித்த துறைசார் மேற்பார்வை குழு - மலித் ஜயதிலக்கவின் அறிக்கை

3. பேமு அச்சம் மற்றும் நந்தன - விஜித இடைக்கால அறிக்கை (சமபிம பத்திரிகைக்கு பிரபோத ரத்நாயக்க / ஜயனி அபேசேகர எழுதிய கட்டுரை)

[1] https://www.right2lifelanka.org/2022-aug-vsso-reports-in-sinhala-and-tamil/
[2] https://www.parliament.lk/uploads/comreports/1582610778064822.pdf
[3] https://srihanda.lk/2020/07/20/ngo-phobia/?fbclid=IwAR0mpKV9P12dwsa8w9P34BdVCvjYh6kbydGgvONSbv2te0fpX-oOG6fkYwE

## இணைப்பு - 1

1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் திருத்தம் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டத் திருத்தத்திற்கான சிவில் சமூகத்தின் கோட்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகடனம், 2023 ஜனவரி 31ஆம் திகதி சிவில் சமூகம் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் தேசிய கூட்டணியினால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கையளிக்கப்பட்டது.

**Guiding Principles for Policy on Not for Profit Social Service organizations**

This document details the principles that are recommended to inform a policy framework on Sri Lanka's State engagement with not-for-profit social service organizations. It is also the guidelines to be adhered to when drafting any legislation relating to this sector.

**Legal Standards**

Any law should adhere to the fundamental rights guaranteed to the citizens under the Sri Lankan constitution. It should respect the international conventions and standards that Sri Lanka has subscribed to and agreements and commitments Sri Lanka has made.

The constitution of the Democratic Socialist Republic of Sri Lanka of 1978 in article 14 (1) guarantees the freedom of assembly and expression. Article 14 (1)[1] secures the constitutional rights of freedom of association, subject to limitations as stipulated by Article 15 (4)[2].The rights to freedom of association serve as a vehicle for the exercise of many other civil, cultural, economic political and social rights.[3] These rights are essential components of democracy as they empower people to express their political opinions, engage in literary and artistic pursuits and other cultural, economic and social activities, engage in religious observances or other beliefs, form and join trade unions and cooperatives, and elect leaders to represent their interests and hold them accountable.[4]

International Conventions and Standards also apply. Sri Lanka is a party to including the Universal Declaration of Human Rights (UDHR) 1948[5], International Covenant on Civil and Political Rights (ICCPR) 1966[6], International Covenant on Economic, Social, and Cultural Rights (ICESCR)[7], the Convention on the Elimination of Discrimination

---

